**தலைப்பு 279 – கேகாலை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காணப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | கேகாலை | (எ) | வரக்காபொல |
| (ஆ) | மாவனெல்ல | (ஏ) | தெஹிஓவிட்ட |
| (இ) | அரநாயக்க | (ஐ) | ருவன்வெல்ல |
| (ஈ) | புலத்கொஹுபிட்டிய | (ஒ) | யட்டியாந்தோட்டை |
| (உ) | ரம்புக்கனை | (ஓ) | தெரணியகல |
| (ஊ) | கலிகமுவ | | |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கேகாலை மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 08 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும்

என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணப்படுதல், தயாரிக்கப்படல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 588 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 551 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 37 மில்லியன் அதாவது 6 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள், தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 518 | 507 | 11 | 2 |
| மூலதன | 70 | 44 | 26 | 37 |
| மொத்தம் | **588** | **551** | **37** | 6 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 27 அமைச்சுக்களிலிருந்தும் 20 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 747 மில்லியன் தொகையும் ரூபா 1,556 மில்லியன் தொகையுமாக ரூபா 2,303 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 658 மில்லியன் தொகையும் ரூபா 1,386 மில்லியன் தொகையுமாக ரூபா 2,044 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் முறையே ரூபா 89 மில்லியன் மற்றும் ரூபா 170 மில்லியன் தொகையுமாக ரூபா 259 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு அமைச்சினாலும் திணைக்களத்தினாலும் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளின் பயன்படுத்தல்களின் பின்னர் சேமிப்பு 0.07 சதவீதம் முதல் 95.58 சதவீதம் வரையிலான அளவைக் கொண்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 27901 | 38 | 33.4 | 30 | 29.8 | 150.6 | 135.3 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 462.4 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதி ரூபா 557.6 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 279 – கேகாலை மாவட்டச் செயலகம்

---

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

நிதிப்பிரமாணம் 454(1) இன் பிரகாரம் யட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் பொருட் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 எல்லை பின்பற்றப்படாமை

---

2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூன்றாவது பட்டோலையின் விடய இலக்கம் 27901 இன் கீழ் வருகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 30,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் உள்ளபடியான பெறுவனவு ரூபா 29,838,113 ஆனமையால் ரூபா 161,887 இனால் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு**

---

தலைப்புகள் 105 மற்றும் 120 இன் கீழ் இரண்டு அமைச்சுக்களின் மூலம் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி கலிகமுவ மற்றும் தெரணியகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் நலனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 4,791,041

கூட்டுப்பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பொருட்கள் 2014 பெப்ரவரி மாதம் வரையிலும் நலனாளிகளிக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 89,801,535 கூட்டுத்தொகையான 150 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் படி அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 3,069,438 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான காலமாக கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) 06 பிரதேச செயலகங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்குரிய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் பேணப்படாமை, அங்கத்தவர் கடன் பதிவேடு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கிடையே வேறுபாடு காணப்பட்டமை, இடர் கடன் செலுத்தும் போது தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவிற்கு முரணாக 40 சதவீத அறவீட்டு எல்லையைக் கவனத்தில் கொள்ளாமை, ஆளணிக் கோவைகளில் கடன் அட்டை காணப்படாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின்போது மாவட்ட செயலகத்தின் மூலதனச் சொத்துக்களைக் கைப்பற்றல் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற சொத்துக்கள்

ஜப்பான் உதவியின் கீழ் அரனாயக்க பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட டேலர் பவுசர் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் 2015 யூலை மாதம் வரையிலும் பயன்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

றம்புக்கனை பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளர் ஒருவர் 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதி இடமாற்றலாகிச் சென்ற போதிலும் 2015 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் அவர் வாழ்ந்து வந்த உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் பதிவேட்டுப் பொருட்கள் கையளிக்கப்படாதிருந்ததுடன் இடமாற்றலாகிச் சென்ற திகதி முதல் நிலுவை வீட்டு வாடகை மற்றும் தொலைபேசிப் பட்டியல்களும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.8 இணங்காமைகள்**

றம்புக்கனை பிரதேச செயலகத்தினால் ரூபா 531,878 கூட்டுத்தொகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நிதிப்பிரமாணம் 237 (ஆ) இன் பிரகாரம் 03 சந்தர்ப்பங்களின் போது அந்த பொருட்கள் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்தமையை உறுதிப்படுத்துவதற்காக உரிய பொருட் பதிவேட்டிலோ அல்லது இருப்புப்

புத்தகங்களிலோ பதிவுகள் இடப்பட்டமை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டங்களின் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

தெரணியகல மற்றும் யட்டியாந்தோட்டை பிரதேச செயலகங்களினால் 2014 ஆம் ஆண்டின்போது வேலை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 8,867,000 ஆன 08 செயற்திட்டங்களை அமுல்படுத்தல் முறையாகத் திட்டமிடப்படாமையினால் 2015 பெப்ரவரி மாதம் வரையிலும் அந்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| கேகாலை புதிய மாவட்ட செயலக நிர்மாணம் | 294,982,342 | 2011.05.10 | 62,139,332 | ஒப்பந்தக்காரரின் செயற்திறனின்மை மற்றும் போதியளவான மேற்பார்வை இன்மை |
| புளத் கொஹுபிட்டிய வாராந்த சந்தை நிர்மாணம் | 34,385,051 | 2014.01.01 | 854,978 | |

(இ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

---------------------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டின் போது வேலையைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,694,160 தொகையான தெரணியகல சிரிசமண் வித்தியாலயத்தின் நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஒப்பந்தக்காரரின் செயற்திறனின்மையினால் 2015 மார்ச் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 7,573,770 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நிதி விடுவிக்கப்பட்டிருச்த போதிலும் செயல்முன்னேற்றத்தைப் பெற்றிராத செயற்திட்டங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களுக்காக நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களிலிருந்து செயல்முன்னேற்றமொன்றும் பெறப்பட்டிருக்கவில்லை.

(i) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் 05 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 7,651,781 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் மாதம் வரையிலும் அதில் 04 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டமொன்றின் பம்பிக்கூடம் தனியார் காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் சில வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) திப்பிடிய வாராந்த சந்தை கட்டம் I மற்றும் II என்பவற்றினது நிர்மாணத்திற்காக 2015 மார்ச் மாதம் வரை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 12,030,451 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் கொங்கிரீட் தூண்கள் நில மட்டம் வரையிலுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பாரியளவான செலவினமொன்றைச் செய்து ஆரம்ப மதிப்பீட்டில் காணப்படாத பக்கச் சுவரொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் II ஆம் கட்டத்திற்காக திருத்தப்பட்ட திட்டமும் தயாரிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தின் மேலதிக வேலைக்காக ரூபா 1,000,866 தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் மேற்பார்வையில் போன்ற சகல நடவடிக்கைகளும் அரச பொறியியல்

கூட்டுத்தாபனத்தினாலேயே நிறைவேற்றப்பட்டமையினால் மேலதிக வேலையின் அளவு சரியானதா என்பது மாவட்ட செயலகத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இரண்டு மாடிகளையுடைய துத்திரிபிட்டிய பஸ் நிலையத்திற்காக ரூபா 24,440,263 தொகையான மதிப்பீட்டில் நிர்மாண நடவடிக்கைகள் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டு 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 மார்ச் 19 ஆந் திகதி வரையில் கூரையுடன் கட்டிடத்தின் சுவர்கள் மாத்திரம் சீமெந்து கற்களினால் அமைக்கப்பட்டிருந்தன. இந்த பஸ் நிலையத்தின் தேவை தொடர்பாக சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சன நடமாற்றமற்ற பிரதேசத்தில் அந்த நிர்மாணம் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. அவ்வாறே கட்டிடத்தின் சுவர் 6 அங்குல அகலத்தில் கட்டப்படுவதற்காக ரூபா 175,661 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த சுவர் 4 அங்குல அகலத்தில் கட்டப்பட்டிருந்ததுடன், பயன்படுத்தப்பட்ட சீமெந்துக்கல் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் தூண்கள் உரிய நியமத்தில் காணப்படவில்லை. பஸ் நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்தின் படி தரை மாடியின் சதுரப்பரப்பு 23625 X 9675 மி.மீ அளவாக இருக்க வேண்டிய போதிலும் பௌதீக பரிசோதனையின் படி அது 20800 X 8,700 மி.மீ அளவாக இருந்தது.

(உ) நிறைவேற்றப்படாத வேலைகளுக்கான கொடுப்பனவு

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 21,469,815 தொகையான புளத்கொஹுபிட்டிய சுடலைக்கூடத்தை நிர்மாணிப்பதற்கான வேலையின் 2015 மார்ச் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் படி நிறைவேற்றப்படாத வேலைக்காக மேலதிகமாக ரூபா 717,018 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கொடுப்பனவு அறிக்கையின் படி கட்டிடத்தின் சுவர் 6’’ அகலத்தில் கட்டப்படுவதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அச் சுவர் 4’’ அகலத்தில் கட்டப்பட்டிருந்ததுடன் 6’’ அகலத்தில் கட்டுவதற்காக ரூபா 150,738 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) வீதிகளுக்கு கொங்கிரீட் இடும் போது சட்டரின் பலகைகளைத் திரும்பத் திரும்ப பயன்படுத்தப்பட முடியும் என்ற அடிப்படையில் மொத்த நீள அளவில் 1/3 அளவில் செலுத்த வேண்டிய போதிலும் றுவன்வெல்ல பிரதேச செயலகம் மொத்த அளவின் அடிப்படையில் சட்டரினுக்காக 23 வேலைகளுக்கு ரூபா 356,573 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) றுவன்வெல்ல பிரதேச செயலகத்தினால் பிரதேச சபையூடாக நிறைவேற்றப்பட்ட 22 வேலைகளைப் பரீட்சித்த போது கொங்கிரீட் போடப்பட்ட சகல வீதிகளுக்கும் ABC கலவை பயன்படுத்தப்பட்டு கொங்கிரீட் இடப்படுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 785,981 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ABC கலவை போடப்பட்டிருக்கவில்லை.

## 3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரணியகல பிரதேச செயலகப் பிரிவில் திக்எல்ல கந்த சிறிபா மாவத்தைக்கு கொங்கிரீட் இடுவதற்காக 2014 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 392,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக 2015 பெபிரவரி 26 ஆந் திகதிய பௌதீக பரிசோதனைகளின் படி வீதியின் அளவினைவிட நீளமாகவும் அகலமாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மேலதிகமாகச் செய்யப்பட்ட அளவான வீதியைப் பயன்படுத்துகின்ற சிறிய நீர்மின்வலு நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அறிக்கையிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கோவையில் குறிப்பிடப்படாதிருந்தமையினால் வெளி நிறுவனங்களின் மூலமும் பிரதேச செயலகத்தின் மூலமும் நிறைவேற்றப்பட்ட அளவினை விளக்கமாக இனங்காண முடியாதிருந்தது.

## 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்குப் புறம்பானதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தினால் 2013 திசெம்பர் 18 ஆந் திகதிய கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,053,500 செலவில் 06 கணனி இயந்திரங்கள், 03 மடிக் கணனிகள் மற்றும் 06 யூ.பீ.எஸ் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.6.1 வழிகாட்டிக்கு முரணாக மேற்கூறப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 500 சதவீத பெறுமதியான பொருட்கள் மீளக் கட்டளையிடப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 3,367,800 கூட்டுத்தொகையான கணனிகள் மற்றும் 30 யூ.பீ.எஸ் இயந்திரங்கள் வீதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளின் செயற்பாட்டு முறைமை மற்றும் இறுவட்டுக்கள் வழங்கப்பட்ட மாதிரிகளை விட குறைந்த தரத்தில் காணப்பட்டதுடன், அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.3 வழிகாட்டியின் படி வழங்கப்பட்ட பொருட்கள், மாதிரிக்கும் ஏனைய இணங்கப்பட்ட நியமங்களுக்கும் இணங்கியிருந்தமையும், பொறுப்புச் சான்றிதழ், காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் கைநூல்கள் இணங்கப்பட்ட மாதிரியில் வழங்கப்பட்டமைக்கும் சான்றிதழொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கேகாலை மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட தாய் சேய் சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 15,522,895 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்கள் 2014 திசெம்பர் 10 அந் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. கேள்வி கோரலின் போது திறந்த சந்தையில் கூறுவிலைகள் கோரப்படாதிருந்ததுடன் அதற்காக போதியளவான கால நேரம் காணப்படாமை மற்றும் தாய் சேய் சிகிச்சை நிலையங்கள் 2014 பெப்ரவரி 04 ஆந் திகதிக்கு முன்னர் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை காரணங்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. 2014 திசெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் எவ்வித தாய் சேய் சிகிச்சை நிலையங்களினதும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு திறக்கப்படாதிருந்ததுடன், கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் உத்தரவாதக் காலமும் முடிவடையும் தறுவாயில் காணப்பட்டது.

**3.12 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-------------------------------------------------------------------------------------

66 ஆவது சுதந்திர தின விழா நடாத்தப்பட்ட கேகாலை நிதஹஸ் மாவத்தை சந்தை வளவின் அருகில் கடைகளின் அசுத்தமான சுவருக்கு தகரத்தைப் பயன்படுத்தி மேவுகை செய்வதற்காக ரூபா 1,950,839 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த வேலைக்காக கூறுவிலை கோரும்போது இறந்த நபரினதும் அந்த வேலையில் ஈடுபடாத, தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் உறவினரின் பெயர் மற்றும் முகவரி என்பவற்றைப் பயன்படுத்தி முன்னர் தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கூறுவிலை கோரும் போது, அந்த மேவுகைகளைத் தயாரிப்பதற்காக தேவையான தகரங்கள் மாவட்ட செயலகத்தின் மூலம் வழங்கப்படுமென காண்பிக்கப்பட்டமையினால் மாவட்ட செயலகத்திற்கு அந்த தகரங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அவற்றை கழற்றி அகற்றுவதற்கான கூலியினை வழங்குவதற்கும் ரூபா 1,031,615 கூட்டுத்தொகையான மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.13 நட்டம் மற்றும் இழப்பு**

------------------------------------

வரகாப்பொளை பிரதேச செயலகத்தில் கெப் வண்டியொன்று 2011 யூன் 24 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியமையால் ரூபா 277,300 தொகையான நட்ட இழப்பு ஏற்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 167,250 தொகை காப்புறுதி இழப்பீடாகக் கிடைத்திருந்தது. இந்த விபத்திற்குரிய வழக்கு விசாரணையின் போது கெப் வண்டிக்கு பின்புறமாக வந்த வாகனத்தின் சாரதி குற்றமிழைத்தவராக இருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய ரூபா 110,050 தொகையான நட்ட இழப்புக்களை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------------------------

தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) கித்துள்கல வாராந்த சந்தையில் 03 கட்டிடங்கள் மற்றும் மலசல கூட முறைமையினை அமைப்பதற்காக ரூபா 17,342,757 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2013 திசெம்பர் 25 ஆந் திகதிக்கு முன்னர் அமுல்படுத்துவதற்காக அரசாங்க நிர்மாண அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு கட்டிடம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2014 சனவரி 17 ஆந் திகதி ஆரம்ப மதிப்பீட்டில் காணப்படாத பக்கச் சுவரையும் உள்ளடக்கி மிகுதி இரண்டு கட்டிடங்கள் மற்றும் மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக ரூபா 33,072,352 பெறுமதியான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு வேறொரு ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் முடிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதிக்காகவும் மதியுரைச் சேவைக் கட்டணங்களுக்காகவும் ரூபா 3,177,612 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. பக்கச் சுவர் மற்றும் மண் நிரப்பட்ட நிலத்தில் நிர்மாணங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அந்த இடத்தில் வாராந்த சந்தையும் நடாத்தப்படாமையினால் அந்த நிலம் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வல்பொலகம குடிநீர் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்காக ரூபா 980,392 தொகையில் 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஒப்பந்தக்காரச் சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 மார்ச் 31 அந் திகதி ரூபா 882,328 தொகை ஒப்பந்தக்காரச் சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2015 மார்ச் மாதத்தின் பௌதீக பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் 07 மதிப்பீட்டு வேலை விடயங்கள் உரிய நியமத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பம்பிக்கூடத்திலிருந்து நீர்க்களஞ்சிய தாங்கி வரை பதிக்கப்பட்ட 1½” நீர்க்குழாய் சில இடங்களில் வெடித்திருந்தது. பம்பிக்கூடத்திற்கு வழங்கப்பட்ட மின்சாரம் துண்டிக்கப்பட்டமை, தாங்கி நீரின்றி திறக்கப்பட்டிருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக அதன் பிரதான நோக்கமான கிராம வாசிகளுக்கு குடிநீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்காக சமூகப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,247,069 தொகையான செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான் பதவியணியும்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 42 | 37 | 5 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 22 | 8 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,037 | 1,007 | 32 | 2 |
| (iv) | ஆரம்ப நிலை | 115 | 109 | 15 | 9 |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | - | - | - |
| | மொத்தம் | 1,224 | 1,175 | 60 | 11 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1992 ஆம் ஆண்டின் பின்னர் மாவட்ட செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மீள் திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரணியகல பிரதேச செயலகத்தில் முக்கியமான பதவிகளான முகாமைத்துவ உதவியாளர் சேவையின் (அதிஉயர் தரம்) (A.O) அபிவிருத்தி இணைப்பாளர், மொழி பெயர்ப்பாளர், திட்டமிடல் வடிவமைப்பாளர், காவலாளி மற்றும் சுகாதாரத் தொழிலாளி போன்ற முக்கியமான பதவிகளை உள்ளடக்கிய 10 பதவிகளில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டன.